நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
**NSW Federation of Tamil Schools Inc.**

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

## தரம் : இடைநிலை – கீழ்ப்பிரிவு

## Level : Intermediate - Lower

***December 2011***

வினாக்கள் : 50

வழங்கப்படும் நேரம் : 60 நிமிடங்கள்

(வாசிப்பதற்கான நேரம் : 10 நிமிடங்கள் உட்பட)

உங்கள் பதில்களைத் தரப்பட்ட விடைத்தாளில் குறியிடுக.

1 முதல் 5 வரையுள்ள வினாக்களுக்கு கோடிட்ட இடத்திற்கு மிகவும் பொருத்தமான சொல்லை கீழே தரப்பட்டுள்ள சொற்களில் இருந்து தெரிவு செய்து பூரணப்படுத்துக.

**For questions 1 to 5, choose the most suitable word for the underlined space to complete the paragraph.**

## காடுகளைப் பாதுகாத்தல்



மழை பெறுவதற்கு மனிதனுக்கு (1)____________________ அவசியமாகின்றன. அதேபோல் விலங்குகள் உயிர்வாழ்வதற்கும் காடுகள் தேவைப்படுகின்றன. சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கு (2)____________________ முக்கிய பங்கை வகிக்கிறது. இன்று மனிதன் (3)____________________ தயாரிக்க காடுகளை அழிக்கின்றான். இதனால் (4)____________________ இருப்பிடங்களை இழந்து வாழ்கின்றன. மனிதர்கள் (5)____________________ பற்றாக்குறையை எதிர்நோக்குகின்றனர். எனவே நாம் காடுகளை பாதுகாக்க வேண்டும்.

a) தண்ணீர்
b) மிருகங்கள்
c) காடுகள்
d) பொருள்களைத்

**6 முதல் 10 வரையுள்ள வினாக்களுக்கு கோடிட்ட இடத்தில் மிகவும் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.**

**For questions 6 – 10, choose the correct word for the underlined space to complete the statements.**

6. இன்றைக்கு ஒரு வேளை மழை ____________________.

a) பெய்யவேண்டும்
b) பெய்யலாம்
c) பெய்யமுடியும்
d) பெய்கிறது

7. புறாக்கள் உயரத்தில் ____________________.

a) பறந்தது
b) பறக்கிறது
c) பறக்கின்றன
d) பறக்குமா.

8. நான் நேற்று மழையில் ____________________.

a) நனைய முடியாது
b) நனைய வேண்டும்
c) நனைந்து விட்டேன்
d) நனையக் கூடும்

9. தொதைபேசியில் "பதில் சொல்லும் பொறி" (answering machine) தமிழில் பதில் ____________________.

a) அளித்தது
b) அழித்தது
c) அலித்தது
d) அழிக்கின்றன

10. குழந்தைகள் பாலுக்காக ___________________________.

a) அழுகிறது
b) அழும்
c) அழுகின்றன
d) அழுதது

**11 முதல் 15 வரையுள்ள வினாக்களுக்கு தரப்பட்ட வசனத்தில் கோடிட்ட சொல்லிற்கான எதிர்ச் சொல்லை தெரிவு செய்க.**

**For questions 11 – 15 choose the correct word that is opposite in meaning to the underlined word.**

11. சூரியன் <u>காலையில்</u> உதிக்கும்.

a) இரவில்
b) மாலையில்
c) நடுஇரவில்
d) மலையில்

12. எல்லோரும் <u>நன்மை</u> செய்ய வேண்டும்.

a) கொடுமை
b) தீமை
c) பாவம்
d) கெடுதல்

13. மாணவர்கள் <u>பொய்</u> பேசக் கூடாது.

a) மெய்
b) நேர்மை
c) நீதி
d) அநீதி

14. தீ விபத்தில் மக்கள் இறந்ததைக் கேள்விப்பட்டோர் <u>கவலை</u> அடைந்தார்கள்.

a) ஆத்திரம்
b) மகிழ்ச்சி
c) உவகை
d) துக்கம்

15. மாணவர்கள் கதிரையில் <u>அமர்ந்தனர்</u>.

a) இருந்தனர்
b) நின்றனர்
c) குதித்தனர்
d) படுத்தனர்

அடுத்த பக்கத்தில் தொடரும்.

பின்வரும் பந்தியை வாசித்து 16 முதல் 20 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.

**Read the text below and answer the questions 16 – 20**

## நோய்க்கு இடம் கொடேல்

சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையலாம் என்பது முதுமொழி. உடல் வளமுடன் இருந்தால் வாழ்வு வளம் பெறும். வளமான உடலிற்தான் செழுமையான மனம் இருக்கும். நாம் உடல் நலமுடன் வாழ நோய்களிலிருந்து நம்மை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். “நோய்க்கு இடம் கொடேல்” என்னும் முதுமொழிக்கு இணங்க நோய் அணுகா வழிமுறைகளை நாம் கையாளுதல் நன்மை பயக்கும். நாம் உயிர் வாழ்வதற்கு காற்று, நீர், உணவு, உடை, உறைவிடம் என்பவை அவசியமாகும். உண்ணும் உணவு சத்துள்ளவையாக இருக்க வேண்டும். உடுக்கும் உடை அழுக்கின்றி தூய்மையாக இருக்க வேண்டும். நாம் வாழும் வீடு சுத்தமாக, காற்றோட்ட வசதி உள்ளதாக இருத்தல் வேண்டும். தினந்தோறும் உடற்பயிற்சி செய்தல் வேண்டும். சுகாதார பழக்கவழக்கங்களை முறையாக பழகிவந்தால் நோய்கள் அணுகமாட்டா.

16. வாழ்வு வளம் பெற நாம் எவ்வாறு இருக்க வேண்டும்?

a) கல்வி அறிவுடன்
b) எழுத்து அறிவுடன்
c) வீட்டு வசதியுடன்
d) உடல் வளமுடன்

17. நாம் உயிர்வாழ்வதற்கு மிக இன்றிமையாத ஒன்று எது?

a) உடை
b) காற்று
c) உறைவிடம்
d) உடற்பயிற்சி

18. நாம் உடுக்கும் உடை எவ்வாறு இருக்க வேண்டும்?

a) அழுக்காக
b) தூய்மையானதாக
c) வடிவாக
d) நாகரீகமாக

19. நாம் தினந்தோறும் என்ன செய்தல் வேண்டும்?

a) பாடசாலை செல்ல வேண்டும்
b) தொலைக்காட்சி பார்க்க வேண்டும்
c) உடற்பயிற்சி செய்தல் வேண்டும்
d) வானொலி கேட்க வேண்டும்.

அடுத்த பக்கத்தில் தொடரும்.

20. “நோய்க்கு இடம் கொடேல்” என்பதன் விளக்கம்:

a) வருத்தமின்றி இருத்தல்
b) உணவு இன்றி இருத்தல்
c) கல்வி அறிவு இன்றி இருத்தல்
d) அழகாக இருத்தல்

**21 முதல் 25 வரையுள்ள வசனங்களில் கோடிட்ட சொல்லிற்கு பன்மை சொல்லை தெரிந்து அவற்றை பூரணப்படுத்துக.**

**For question 21 to 25 choose the correct word that is plural to the underlined word to complete the sentences.**

21. அப்பாவின் நண்பர் ஒருவர் அங்கே வசிக்கிறார்.

a) நண்பன்
b) நண்பி
c) நண்பர்கள்
d) சினேகிதன்

22. ஆசிரியர் கூட்டத்திற்குப் போனார்.

a) ஆசிரியர்கள்
b) ஆசிரியை
c) உபாத்தியார்
d) தலைவர்

23. பறவை பறந்தது.

a) பறக்கும்
b) பறக்கின்றன
c) பறந்தன
d) பறந்தவை

24. சிறுமி கலைவிழாவில் நடனம் ஆடினாள்.

a) சிறுவன்
b) சின்னவன்
c) சிறுவர்கள்
d) சிறுமிகள்

அடுத்த பக்கத்தில் தொடரும்.

25. <u>அவன்</u> கடைக்கு சென்றான்

a) அவள்
b) அவர்கள்
c) அது
d) அவை

**26 முதல் 28 வரையுள்ள வசனங்களில் கோடிட்ட சொல்லிற்கு பொருத்தமான வேறு சொல்லைத் தெரிவு செய்க.**

**For questions 26 to 28 choose the word that is similar or closest in meaning to the underlined words.**

26. மாதவி <u>புன்னகை</u> செய்தாள்.

a) பார்த்தாள்
b) சிரித்தாள்
c) சிரிப்பூட்டினாள்
d) அழுதாள்

27. அபியை <u>கூட்டிச் செல்ல</u> வருவார்கள்.

a) அழைத்துச் செல்ல
b) எடுத்துச் செல்ல
c) கொண்டு செல்ல
d) நடாத்திச் செல்ல

28. விளக்கின் <u>ஒளி</u> பிரகாசமாய் இருந்தது.

a) ஒலி
b) வெளிச்சம்
c) ஒழி
d) ஓசை

**29 தொடக்கம் 32 வரையுள்ள வினாக்களுக்கு இடைவெளிக்கு மிகவும் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.**

**For questions 29 to 32 choose the most appropriate word for the underlined space to complete the statements.**

29. நாய் குரைக்கும் அது போல் யானை ________________________.

a) உறுமும்
b) கூவும்
c) பிளிறும்
d) அழும்

30. உன் அம்மாவின் அம்மா ________________________.

a) அப்பம்மா
b) அம்மம்மா
c) பெரியம்மா
d) பெரியப்பா

31. நோயாளிக்கு சிகிச்சை அளிப்பவர் ________________________.

a) ஆசிரியர்
b) பாடகர்
c) வைத்தியர்
d) ஓவியர்

32. அப்பா ____________________ பேசினார்.

a) தொலைபேசியில்
b) துக்கம்
c) சண்டை
d) வீதி

**33 முதல் 35 வரையான வினாக்களுக்கு மிகவும் பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

**For questions 33 to 35 choose the most appropriate answer.**

33. "மகாகவி" என அழைக்கப்பட்ட கவிஞர் பெயர் என்ன?

a) திருவள்ளுவர்
b) சுப்பிரமணிய பாரதியார்
c) கம்பர்
d) இளங்கோ அடிகள்

34. மெய் எழுத்துக்கள் எவை?

a) அ, ஆ, இ, ஈ
b) க், ங், ச், ஞ்
c) ப, பா, பி, பீ
d) உ, ஊ, வி, வீ

35. சூரியனுக்கு நன்றி சொல்வதற்காக எடுக்கும் தினம் எது?

a) ஆடிப்பிறப்பு
b) தீபாவளி
c) தைப்பொங்கல்
d) சித்திரைப் புத்தாண்டு

**36 தொடக்கம் 40 வரையிலான வினாக்களுக்கு கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களுள் சரியாக ஒழுங்குபடுத்தி வாக்கியத்தை தெரிவு செய்க.**

**For questions 36 to 40 chose the meaningful sentence arranged in the best way.**

36. a) ஏழு வானவில்லில் உள்ளன நிறங்கள்
    b) வானவில்லில் ஏழு நிறங்கள் உள்ளன
    c) நிறங்கள் உள்ளன ஏழு வானவில்லில்
    d) உள்ளன ஏழு நிறங்கள் வானவில்லில்

37. a) வெளிநாடு விடுமுறையில் சென்றேன், நான்
    b) நான் சென்றேன் வெளிநாடு விடுமுறையில்
    c) நான் சென்றேன், விடுமுறையில் வெளிநாடு
    d) நான் விடுமுறையில் வெளிநாடு சென்றேன்

38. a) நடனம் புதிய கற்கிறேன் ஊக்கத்துடன் நான்.
    b) நான் புதிய ஊக்கத்துடன் நடனம் கற்கிறேன்
    c) நான் ஊக்கத்துடன் நடனம் புதிய கற்கிறேன்
    d) ஊக்கத்துடன் புதிய நடனம் நான் கற்கிறேன்

39. a) பொழுது எழுதுங்கள் நேரம் கடிதம் கிடைக்கும்
    b) எழுதுங்கள் கடிதம் நேரம் கிடைக்கும் பொழுது
    c) நேரம் கிடைக்கும் பொழுது கடிதம் எழுதுங்கள்
    d) கடிதம் எழுதுங்கள் நேரம் கிடைக்கும் பொழுது

40. a) இருக்கிறது பை வெளியே குப்பை போடும்
    b) குப்பை போடும் பை வெளியே இருக்கிறது
    c) பை வெளியே இருக்கிறது குப்பை போடும்
    d) இருக்கிறது வெளியே குப்பை போடும் பை

**41 முதல் 45 வரையுள்ள வினாக்களில் கோடிட்ட சொல்லுக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.**

**For questions 41 to 45 choose the most appropriate answers.**

41. அம்மா கோயிலுக்கு பூமாலை கட்டினார்.
   a) மல்லிகை மாலை
   b) முத்து மாலை
   c) மலர் மாலை
   d) மொட்டு மாலை

42. இந்த பலாப்பழம் ருசியானது.
   a) சுவையானது
   b) நல்லது
   c) இனிப்பானது
   d) புளிப்பானது

43. இருபது ஆண்டுகளின் பின் நீர் நிலைகளில் தண்ணீர் நிரம்பியது.
   a) வாரங்களில்
   b) நாட்களில்
   c) வருடங்களில்
   d) மாதங்களில்

44. கலை விழாவில் ஆரம்ப உரை நன்றாக இருந்தது.
   a) தொடக்கம்
   b) நன்றி
   c) இறுதி
   d) தலைமை

45. மாணவர்கள் கலகலப்பாக பேசினார்கள்.
   a) கோபமாக
   b) கவனமாக
   c) ஆழமாக
   d) மகிழ்ச்சியாக

அடுத்த பக்கத்தில் தொடரும்.

**46 முதல் 50 வரையுள்ள வினாக்களுக்கு பின்வரும் பாட்டை வாசித்து விடை எழுதுக.**

**Read the following poem and answer the questions 46 to 50.**

*தமிழைக் கற்றுத் தந்திடுவாய்!*

அம்மா அம்மா வருவாயே,
அன்பாய் முத்தம் தருவாயே,
அம்மா உன்னைக் கண்டாலே,
அழுகை ஓடிப் போய்விடுமே.

பத்து மாதம் சுமந்தாயே
பாரில் என்னைப் பெற்றாயே.
பத்தியங்கள் காத்தாயே.
பாடு பட்டு வளர்த்தாயே.

அழகு மிக்க சந்திரனை
ஆகாயத்தில் காண்பித்தே
பழமும், பாலும் ஊட்டிடுவாய்,
பாட்டும் கதையும் கூறிடுவாய்.

தமிழைக் கற்றுத் தந்திடுவாய்.
'தத்துப் பித்' தெனப் பேசிடினும்
'அமுதம் அமுதம்' என்றிடுவாய்.
அணைத்து முத்தம் தந்திடுவாய்.

அழ. வள்ளியப்பா

46. அம்மாவை கண்டால் என்ன ஓடிப் போகும்?

a) சிரிப்பு
b) துன்பம்
c) அழுகை
d) கோபம்

47. அம்மா ஆகாயத்தில் என்ன காண்பித்தாள்?

a) சூரியனை
b) சந்திரனை
c) விண்வெளியை
d) ஆகாயத்தை

48. அம்மா அன்பாக என்ன தந்திடுவாள்?

a) உணவு
b) உடை
c) இனிப்பு
d) முத்தம்

அடுத்த பக்கத்தில் தொடரும்.

49. அம்மா என்ன கற்றுத் தருவாள்?

a) பாட்டு
b) தமிழ்
c) எழுத்து
d) நடனம்

50. அம்மா எத்தனை மாதம் சுமந்தார்?

a) ஐந்து மாதம்
b) பத்து மாதம்
c) இருபது மாதம்
d) பதினைந்து மாதம்